தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6341/SCIC/2025**

திருமதி.V. குமுதா, - மேல்முறையீட்டாளர்
க/பெ.திரு.இராமச்சந்திரன்
எண்.9, 7வது குறுக்குத் தெரு
சமயபுரம் மெயின் ரோடு
போரூர், சென்னை - 600 116.
Phone:99435 41842.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
சட்டம் (ம) ஒழுங்கு
தாம்பரம் மாநகரக் காவல்
தாம்பரம் காவல் மாவட்டம்
சென்னை - 600 045.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **17.02.2025** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 22.03.2025 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 23.04.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 17/02/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ T-10, மணிமங்கலம் காவல் நிலையம், தாம்பரம் காவல் மாவட்டம், மணிமங்கலம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "நான் 26/10/2023-ல் என்னுடைய நிலத்தில் ச.எண்.67/1, இடம் துண்டல் கழனி, பரப்பு (0.14 சென்ட்) அத்துமீறி கம்பி வேலி அமைத்து என்னுடைய இடத்திற்கு செல்ல முடியாதபடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது, தொடர்பாக திருமதி.சரஸ்வதி க/பெ.நந்தகோபால் என்பவர் மீது 26/10/2023-ல் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் 28/10/2023-ல் பெறப்பட்ட தங்களின் காவல் அழைப்பாணை (160 கு.வி.மு.ச) ஏற்று 29/10/2023-ல் ஆஜரானேன். மேலும் விசாரணையின் போது என்னால் தங்களின் முன் அளிக்கப்பட்ட ஆவணங்கள், புகைப்பட நகல் மற்றும் எதிர்

மனுதாரரால் அளிக்கப்பட்ட (ச.எண்.67/1)-க்கு உரிமை கோரும் ஆவணங்களின் நகல்களையும் மற்றும் எழுத்துப் பூர்வமாக எதிர் மனுதாரரால் தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குமூல நகல்களையும் எனக்கு தகவல்களாக வழங்கக் கோருகிறேன்." என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.V.குமுதா அவர்கள் தனது கணவர் திரு.இராமச்சந்திரன் என்பவருடன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.M.சேகர்பாபு, காவல் உதவி ஆணையர், கூடுவாஞ்சேரி சரகம் அவர்கள் உரிய அங்கீகாரக் கடிதத்துடன் ஆஜராகி, மனுதாரருக்கு 29/07/2025 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில் இம்மனுதாரரின் இதே பொருண்மை கொண்ட மற்றொரு மனுவின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, நீதிமன்றத்தில் தடையாணையும் பெறப்பட்டுள்ளது என்றார். மனுதாரர் தெரிவிக்கையில், இன்னமும் வேலி அவ்விடத்திலிருந்து அகற்றப்படாமல் அங்கேயே அமைந்துள்ளது என்றார். **எனவே, பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி மேற்சொன்னவாறு நீதிமன்றம் பிறப்பித்த தடையாணையின் நகலினை மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 17/02/2025 தேதியிட்ட மனுவிற்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல்களை அனுப்பாமல் காலதாமதமாக அனுப்பியமைக்கு, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பவன்குமார் ரெட்டி, இ.கா.ப. (தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், கோயம்புத்தூர் மாவட்டம்) அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, நேரடியாகவோ அல்லது தனது பிரதிநிதி வாயிலாகவோ 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

**3. மேலும், மனுதாரரின் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான 23/03/2025 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப. (தற்போது இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், சென்னை-16 அவர்கள் எவ்வித பதிலும் அனுப்பவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப., இயக்குநர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, தனது பிரதிநிதி வாயிலாக 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

**4. மேலும், ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர், தனது 29/10/2023 தேதியிட்டு அளித்த புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 17/02/2025 தேதியிட்ட மனுவின் வாயிலாக அளிக்கக் கோரியுள்ளதை, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர் (சட்டம் (ம) ஒழுங்கு, தாம்பரம் காவல் மாவட்டம் அவர்கள், அவ்விவரங்களை / தகவல்களை மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகல் மற்றும் நிறைவேற்றுகை அறிக்கையினை 30/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க**

**வேண்டுமென்று பணிக்கப்படுகிறார். மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 6341/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
சட்டம் (ம) ஒழுங்கு
தாம்பரம் மாநகரக் காவல்
தாம்பரம் காவல் மாவட்டம்
சென்னை - 600 045.

2. திரு.பவன்குமார் ரெட்டி, இ.கா.ப.
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்,
கோயம்புத்தூர் மாவட்டம்
மாவட்டக் காவல் அலுவலகம், கோயம்புத்தூர்.

3. திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப.
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
தற்போது இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்,
சென்னை-16.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.V. குமுதா,
க/பெ.திரு.இராமச்சந்திரன்
எண்.9, 7வது குறுக்குத் தெரு
சமயபுரம் மெயின் ரோடு
போரூர், சென்னை - 600 116.
Phone:99435 41842.

நகல்

1.காவல்துறை தலைமை இயக்குநர்
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.
RG/Sr.PC